130

130
4-49.

மாணவர்

# தமிழ்ப் புத்தகம்



## இரண்டாம் வகுப்பு

வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 OCT 1949
MADRAS

TB
031(கீ)
N49
146130

...ணிய பிள்ளை, பப்ளிஷர், திருநெல்வேலி ஜங்.

மாணவர்

# தமிழ்ப் புத்தகம்

## இரண்டாம் வகுப்பு

வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை
திருவாவடுதுறை ஆதின வித்துவான்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 OCT 1949
MADRAS

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பப்ளிஷர்
திருநெல்வேலி ஜங்ஷன்

காபிரைட்] [விலை அணா 4

முதற் பதிப்பு 1942
ஏழாம் பதிப்பு 1949

TB
031(2)
N49

*Approved by the Madras Text-Book Committee for class use*
*Vide Fort St. George Gazette, Part I—B, Supplement,*
*Part 1, Page 4. Dated 24th May 1949.*

தமிழ்நாடு ... காப்பக ...
சென்னை-600 008.
146130

Printed at the Rajan Electric Press, Madras—1.

# முன்னுரை

'மாணவர் தமிழ்ப் புத்தகம்' என்னும் இப் புத்தக வரிசை சமீபத்தில் சென்னை கல்வி இலாகா அதிகாரிகள் வெளியிட்டிருக்கும் பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப் பட்டிருக்கிறது.

மாணவர்கள் பார்த்துப் பழகிய பொருள்கள் பற்றிய பாடங்களும், நீதிநெறி, உலக அறிவு, இயற்கைப் பொருள ஞானம் இவற்றைப் புகட்டக்கூடிய பாடங்களும், உற்சாகமூட்டும் கதைகளும் இவ்வரிசையில் எழுதப் பட்டுள்ளன. பாடங்கள் படிக்கிரமமாக அமைக்கப்பட் டிருப்பதுமன்றி அவ்வப் பாடங்களுக்குரிய படங்கள் பலவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தவிர, பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளும், பயிற்சிகளும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுவனவாம்.

ஆகவே, இப்புத்தகங்கள் மாணவர்களுக்கு நமது வித்தியா இலாகா அதிகாரிகள் கொடுக்க விரும்பும் மொழி அறிவை எளிதில் கொடுக்குமென்று நம்புகிறேன்.

ஆசிரியர்

# பொருளடக்கம்


| பாடம் | விவரம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1—13. | வாக்கிய பாடங்கள் | ... | 5—22 |
| 14. | முகம் | ... | 23 |
| 15. | பூனையும் அதன் குட்டிகளும் | ... | 24 |
| 16. | பெண்ணும் பொம்மையும் | ... | 25 |
| 17. | பள்ளிக்கூடம் போகுதல் | ... | 26 |
| 18. | பந்து ஆட்டம் | ... | 27 |
| 19. | பெண்கள் கும்மி அடித்தல் | ... | 28 |
| 20. | சூரியன் | ... | 29 |
| 21. | கிழமைகள் | ... | 30 |
| 22. | இரட்டைச் சொற்கள் | ... | 31 |
| 23. | மாதங்கள் | ... | 32 |
| 24. | ஆறு சுவைகள் | ... | 33 |
| 25. | ரோஜாப் பூ | ... | 37 |
| 26. | மிருகங்கள் | ... | 38 |
| 27. | பறவைகள் | ... | 39 |
| 28. | பசு | ... | 40 |
| 29. | குருவிகள் | ... | 41 |
| 30. | ஆலமரம் | ... | 42 |
| 31. | பனைமரம் | ... | 43 |
| 32. | என்ன செய்தான்? | ... | 45 |
| 33. | தாய் சொல் கேளாத கோழிக் குஞ்சு | ... | 47 |
| 34. | 'கோழீ! வா வா' | ... | 49 |
| 35. | மணியும் அவன் மாமனும் | ... | 50 |
| 36. | தாயும் குழந்தையும் | ... | 51 |
| 37 | கை வீசம்மா கை வீசு | ... | 52 |
| 38. | மோட்டார் வண்டிகள் | ... | 53 |
| 39. | நல்ல பையன் | ... | 55 |
| 40. | சுகவழி | ... | 57 |
| 41. | கிராமம் | ... | 59 |
| 42. | தபாற்காரன் | ... | 61 |
| 43. | சோம்பேறி முத்தன் | ... | 63 |
| 44. | கிளிப் பாட்டு | ... | 65 |
| 45. | பேராசை கொண்ட நாய் | ... | 67 |
| 46. | எறும்புகள் | ... | 69 |
| 47. | தெய்வம் இகழேல் | ... | 73 |
| | உலகநீதி | | 75 |

மாணவர்

# தமிழ்ப் புத்தகம்

## இரண்டாம் வகுப்பு

---

### பாடம் 1

படத்தில் காட்டு:

மணி எலி குரங்கு



பாடம் படி. நீ வா. மணி அடி.

பயிற்சி: பெயர்களை எழுது.



# பாடம் 2



ஆட்டுக் குட்டி



பழக் கூடை



மரப் பெட்டி



அத்திப் பழம்



பெட்டைக்
கோழி



தாமரைப்
பூ

| | |
|---|---|
| கிளிக் கூண்டு | பழக் கடை |
| தாமரைக் குளம் | மரப் பொம்மை |
| கிளிக் குஞ்சு | கோரைப் பாய் |
| வாழைக் கன்று | கன்றுக் குட்டி |
| வாழைப் பழம் | கருங்கல் |
| மாங்காய் | மாங்கன்று |
| சுண்ணும்புக் கல் | பூந்தோட்டம் |
| பூந் தொட்டி | பூஞ்செடி |
| தென்னந் தோப்பு | கீரைப் பாத்தி |
| தந்தச் சீப்பு | தங்கச் சங்கிலி |
| மாட்டுக் கொம்பு | குருவிக் குஞ்சு |
| புளியம் பழம் | இரும்புப் பெட்டி |
| பூ தா. | பழம் வாங்கு. |

# பயிற்சி: பெயர்களை எழுது














## பாடம் 3





பூனை எலி

பூனையும் எலியும்





எருது பசு

எருதும் பசுவும்





குல்லாவும் தொப்பியும்

பாலும் சோறும் கொடு.

## பாடம் 4



ஒரு பெட்டி

இது ஒரு மரப்பெட்டி.



ஒரு நாற்காலி

அது ஒரு நாற்காலி.



ஒரு வண்டி

இது ஒரு ஜட்கா வண்டி.



ஒரு குடம்

அது ஒரு மண் குடம்.

வண்டி ஓட்டு.

## பாடம் 5



நாய் குரைக்கும்.



பூனை சீறும்.



ஆடு கத்தும்.



குதிரை கனைக்கும்.



யானை பிளிறும்.



நரி ஊளையிடும்.

சேவல் கூவும்.





காக்கை கரையும்.

சிங்கம் கர்ஜிக்கும்.





எலி கீச்சிடும்.



குரங்கு கீச்சிடும்.

மனிதன் பேசுகிறான்.






## பாடம் 6

கரும்பலகை கறுப்பு நிறம்.

காக்கை கறுப்பு நிறம்.

சாக்பீஸ் வெள்ளை நிறம்.

வெள்ளை நிறமான பொருள்கள்:

சுண்ணாம்பு, பால், வெண்ணெய்.

ரத்தம் சிவப்பு நிறம்.

மிளகாய் வற்றல் சிவப்பு நிறம்.

இலை பச்சை நிறம்.

கிளி பச்சை நிறம்.

வாழைப் பழம் மஞ்சள் நிறம்.

மஞ்சள் நிறமான பூ பூவரசின் பூ.

ஆகாயம் நீல நிறம்.

# பாடம் 7



இது ஒரு சேவல்.

சேவல் என்ன செய்கிறது?

சேவல் கூவுகிறது.

சேவலுக்கு இரைபோடு.

**சேவல் - சேவலுக்கு**



அது ஒரு நாய்.
நாய் என்ன செய்கிறது?
நாய் குரைக்கிறது.
நாய்க்குச் சோறு போடு.

**நாய் - நாய்க்கு**



இது ஒரு பூனை.
பூனை என்ன செய்கிறது?
பூனை விளையாடுகிறது?
பூனைக்குப் பால் ஊற்று.

**பூனை - பூனைக்கு**



அவள் ஒரு பெண்.
அவள் என்ன செய்கிறாள்?
அவள் எழுதுகிறாள்.
அவளுக்குப் புத்தகம்
கொடு.

**அவள் - அவளுக்கு**

# பாடம் 8



இந்தப் பெண்ணைப் பார்.
இவள் பெயர் கமலம்.
இவள் ஊசியால் தைக்கிறாள்.
இவள் ஒரு சட்டை தைக்கி
றாள்

**பெண் - பெண்ணை** **ஊசி - ஊசியால்**



இவன் யார்?

இவன் தச்சு வேலை

செய்பவன்.

இவன் மரத்தை

அறுக்கிறான்.

இவன் மரத்தை வாளால் அறுக்கிறான்.

**மரம் - மரத்தை** **வாள் - வாளால்**



இந்த மனிதனைப் பார்.
இவன் ஓர் உழவன்.
ஏரால் வயலை உழுகி
றான்.

உழவன் வயலை ஏரால் உழுகிறான்.

**மனிதன்-மனிதனை** **வயல்-வயலை** **ஏர்-ஏரால்**

# பாடம் 9



இது ஒரு வீடு.
இது எங்கள் வீடு.
இது அழகான வீடு.
நாங்கள் வீட்டில்
வசிக்கிறோம்.

**வீடு—வீட்டில்**



இது ஒரு கிணறு.
இந்தக் கிணற்றில்
தண்ணீர் இருக்கிறது.
நாங்கள் கிணற்றிலிருந்து
தண்ணீர் எடுக்கிறோம்.

**கிணறு—கிணற்றில்—**
**கிணற்றிலிருந்து**



இது ஒரு தோட்டம்.
இது எங்கள் தோட்டம்.
தோட்டத்தில் மரங்கள்,
செடிகள் இருக்கின்
றன.
தோட்டத்திலிருந்து
வருகிறோம்.

**தோட்டம்-தோட்டத்தில்-தோட்டத்திலிருந்து**

## பாடம் 10

உன் பெயர் என்ன?

என் பெயர்.........



இவன் ஒரு பையன்.
இவன் பெயர் ராமன்.
இவன் பள்ளிக் கூடத்திற்குப் போகிறான்.

**ராமன் எங்கே போகிறான்?**



அவள் ஒரு பெண்.

அவள் பெயர் ராதா.

அவள் பள்ளிக்கூடத்திற்குப் போகிறாள்.

**ராதா எங்கே போகிறாள்?**

பையன் பள்ளிக்கூடத்திற்குப் போகிறான்.
பெண் பள்ளிக்கூடத்திற்குப் போகிறாள்.
பையனும் பெண்ணும் பள்ளிக்கூடத்திற்குப் போகிறார்கள்.

**போகிறான்** **போகிறாள்**

**போகிறார்கள்**

## பாடம் 11



உன் கைகளைக் காட்டு.
இவை என் கைகள்.
உனக்கு எத்தனை கைகள்?
எனக்கு இரண்டு கைகள்.

இது என் வலது கை.
இது என் இடது கை.



இவை என் கண்கள்.
எனக்கு இரண்டு கண்கள்.

இது என் வலது கண்.
இது என் இடது கண்.



இவை என்னுடைய கால்கள்.
எனக்கு இரண்டு கால்கள்.
இது என் வலது கால்.
இது என் இடது கால்.

உன்னுடைய கால்களைக் காட்டு.
உனக்கு எத்தனை கால்கள்?

**என் - எனக்கு** **உன் - உனக்கு**

**என்னுடைய** **உன்னுடைய**

## பயிற்சி

**1. சரியான வார்த்தைகளைச் சேர்:—**

| | |
|---|---|
| குதிரை | அலறும். |
| கழுதை | சீறும். |
| பாம்பு | அகவும். |
| ஆந்தை | கனைக்கும். |
| மயில் | கத்தும். |

**2. காலி இடங்களில் சரியான வார்த்தை அமை:—**

கிணற்றில்———— இருக்கிறது.
மீன்கள் ———— வசிக்கும்.
அவள் ———— எழுதுகிறாள்.
அவன் ———— சாப்பிடுகிறான்.
தோட்டத்தில் —— இருக்கின்றன.
இலை ———— நிறம்.

**3. படித்துச் செய்:—**

எழுந்து நில். வாயை மூடு.
உட்காரு. கைகளைக் கட்டு.
கைகளை நீட்டு. புத்தகத்தை எடு.
கண்களைக் காட்டு. புத்தகத்தைத் திற.

குறிப்பு:—மேற்கண்ட கட்டளைகளைக் கரும்பலகையில் எழுதிக்கொள்ள வேண்டும். ஏதாவது ஒன்றைச் சுட்டிக் காட்டவேண்டும். அதன்படி பிள்ளைகள் செய்கிறார்களா என்று கவனிக்கவேண்டும்.

# பாடம் 12



நான் நடக்கிறேன்.
நாங்கள் நடக்கிறோம்.
நீ நடக்கிறாய்.
நீங்கள் நடக்கிறீர்கள்.
அவன் நடக்கிறான்.
அவள் நடக்கிறாள்.
அவர்கள் நடக்கிறார்கள்.
அது நடக்கிறது.
அவை நடக்கின்றன.

நட



நில்

நான் நிற்கிறேன்.
நாங்கள் நிற்கிறோம்.
நீ நிற்கிறாய்.
நீங்கள் நிர்கிறீர்கள்.
அவன் நிற்கிறான்.
அவள் நிற்கிறாள்.
அவர்கள் நிற்கிறார்கள்.
அது நிற்கிறது.
அவை நிற்கின்றன.



நான் உட்காருகிறேன்.
நாங்கள் உட்காருகிறோம்.
நீ உட்காருகிறாய்.
நீங்கள் உட்காருகிறீர்கள்.
அவன் உட்காருகிறான்.
அவள் உட்காருகிறாள்.
அவர்கள் உட்காருகிறார்கள்.

உட்காரு

# பாடம் 13



நான் சோறு சாப்பிடுகிறேன்.
நாங்கள் சோறு சாப்பிடுகிறோம்.
நீ சோறு சாப்பிடுகிறாய்.
நீங்கள் சோறு சாப்பிடுகிறீர்கள்
அவன் சோறு சாப்பிடுகிறான்.
அவள் சோறு சாப்பிடுகிறாள்.
அவர்கள் சாப்பிடுகிறார்கள்.

**சோறு சாப்பிடு**



நான் தண்ணீர் குடிக்கிறேன்.
நாங்கள் தண்ணீர் குடிக்கிறோம்.
நீ தண்ணீர் குடிக்கிறாய்.
நீங்கள் தண்ணீர் குடிக்கிறீர்கள்.
அவன் தண்ணீர் குடிக்கிறான்.
அவள் தண்ணீர் குடிக்கிறாள்.
அவர்கள் தண்ணீர் குடிக்கிறார்
மாடு தண்ணீர் குடிக்கிறது. [கள்
மாடுகள் தண்ணீர் குடிக்கின்றன.

**தண்ணீர் குடி**



நான் எழுதுகிறேன்.
நாங்கள் எழுதுகிறோம்.
நீ எழுதுகிறாய்.
நீங்கள் எழுதுகிறீர்கள்.
அவன் எழுதுகிறான்.
அவர்கள் எழுதுகிறார்கள்.

**எழுது**



## பாடம் 14

## முகம்

உன் முகத்தைக் காட்டு.
இது என்னுடைய முகம்.
முகத்தில் எத்தனை கண்கள் இருக்கின்றன?
முகத்தில் இரண்டு கண்கள் இருக்கின்றன.
நாம் கண்களால் பார்க்கிறோம்.
மூக்கினால் வாசனை அறிகிறோம்.
வாயினால் பேசுகிறோம்; சாப்பிடுகிறோம்.
காதினால் சத்தத்தைக் கேட்கிறோம்.
காது கேளாதவன் செவிடன்.
கண் தெரியாதவன் குருடன்.
பேச முடியாதவன் ஊமை.
மூக்குக் குறைந்தவன் மூக்கறையன்.



## பாடம் 15

## பூனையும் அதன் குட்டிகளும்

பூனையையும் அதன் குட்டிகளையும் பார்.
பூனை எங்கே இருக்கிறது?
பூனை ஒரு பாயின் மேல் இருக்கிறது.
அதன் குட்டிகள் பக்கத்தில் இருக்கின்றன.
எத்தனை பூனைக் குட்டிகள் இருக்கின்றன?
மூன்று பூனைக்குட்டிகள் இருக்கின்றன.
பூனைக் குட்டிகள் என்ன செய்கின்றன?
ஒரு பூனைக் குட்டி படுத்து இருக்கிறது.
இரண்டுபூனைக்குட்டிகள் விளையாடுகின்றன.
பூனைகள் எலிகளைப் பிடித்துத் தின்னும்;
சோறு தின்னும்; பால் குடிக்கும்.



146130
சென்னை-600 008.

## பாடம் 16

## பெண்ணும் பொம்மையும்

பெண் எங்கே இருக்கிறாள்?

பெண் நாற்காலியில் இருக்கிறாள்.

அவள் என்ன செய்கிறாள்?

அவள் பொம்மை வைத்து விளையாடுகிறாள்.

பொம்மை எங்கே இருக்கிறது?

பொம்மை மேசையின் மேலே இருக்கிறது.

பொம்மையின் பக்கத்தில் என்ன இருக்கிறது?

ஒரு விசிறி இருக்கிறது.

அது யாருடைய விசிறி?

அது அந்தப் பெண்ணினுடைய விசிறி.



## பாடம் 17

### பள்ளிக்கூடம் போகுதல்

நான் பள்ளிக்கூடத்திற்குப் போகிறேன்.

எங்கள் பள்ளிக்கூடத்தின் பெயர்———.

எங்கள் பள்ளிக்கூடத்தில்———வகுப்புகள் இருக்கின்றன.

நான் இரண்டாவது வகுப்பில் படிக்கிறேன்; எழுதுகிறேன்; விளையாடுகிறேன்.

எங்கள் பள்ளிக்கூடத்திற்கு ஒரு தோட்டம் உண்டு.

அந்தத் தோட்டம் அழகாக இருக்கும்.



## பாடம் 18

# பந்து ஆட்டம்

இந்தப் பையன்களைப் பாருங்கள்.
இவர்கள் என்ன செய்கிறார்கள்?
இவர்கள் பந்து ஆட்டம் ஆடுகிறார்கள்.
பந்து உருண்டையாக இருக்கிறது.
காலடிப் பந்து பெரியதாக இருக்கிறது.
பையன்கள் பந்தை உதைக்கிறார்கள்.
அது துள்ளி விழுகிறது; உருண்டு ஓடுகிறது.
பையன்கள் அங்கு மிங்கும் ஓடுகிறார்கள்.
அங்கே எத்தனை பையன்கள் நிற்கிறார்கள்?
எண்ணு; ஒன்று, இரண்டு, மூன்று,
நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு,
ஒன்பது.
அங்கே ஒன்பது பையன்கள் நிற்கிறார்கள்.



## பாடம் 19

## பெண்கள் கும்மி அடித்தல்

இந்தப் பெண்களைப் பாருங்கள்.

இவர்கள் என்ன செய்கிறார்கள்?

இவர்கள் கும்மி அடிக்கிறார்கள்.

எத்தனை பெண்கள் கும்மி அடிக்கிறார்கள்?

நான்கு பெண்கள் கும்மி அடிக்கிறார்கள்.

மத்தியில் ஒரு குத்து விளக்கு எரிகிறது.

பெண்கள் விளக்கைச் சுற்றி வருகிறார்கள்;

பாட்டுப் பாடுகிறார்கள்;
கும்மி அடிக்கிறார்கள்.




## பாடம் 20

## சூரியன்

சூரியன் காலையில் உதிக்கிறது.

அது உதிக்கும் திசை கிழக்கு.

கிழக்கே பார்த்து நில்.

அப்பொழுது உன் பின் பக்கம் மேற்கு;
இடது கைப் பக்கம் வடக்கு;
வலது கைப் பக்கம் தெற்கு.

சூரியன் மாலையில் மேற்கே மறைகிறது.

திசைகள் நான்கு.
கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு.

சூரியன் வெளிச்சம் தரும் காலம் **பகல்**.

சூரியன் இல்லாத காலம் இரவு.

பகலும் இரவும் சேர்ந்து ஒரு நாள்.

## பாடம் 21

# கிழமைகள்

ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம்.
நாட்களைக் கிழமை என்று சொல்லுகிறோம்.

### கிழமைகள்

1. ஞாயிற்றுக் கிழமை.
2. திங்கட் கிழமை.
3. செவ்வாய்க் கிழமை.
4. புதன் கிழமை
5. வியாழக் கிழமை
6. வெள்ளிக் கிழமை
7. சனிக் கிழமை.

இன்று என்ன கிழமை?

இன்று ———.

நேற்று என்ன கிழமை?

நேற்று————

நாளை என்ன கிழமை

நாளை ————.

ஒரு வாரத்தில் என்னென்ன கிழமைகள் பள்ளிக்கூடம் உண்டு?

போன வாரத்தில் எத்தனை நாட்கள் பள்ளிக்கூடம் நடந்தது?



## பாடம் 22

## இரட்டைச் சொற்கள்

மணி 'கண கண' என்று அடிக்கிறது.

பூனை 'மியா மியா' என்று கத்துகிறது.

நாய் 'ளொள் ளொள்' என்று குரைக்கிறது.

ஆடு 'மே மே' என்று கத்துகிறது.

காகம் 'கா கா' என்று கரைகிறது.

கமலம் 'கல கல' என்று சிரிக்கிறாள்.

கந்தன் 'மட மட' என்று ஓடுகிறான்.

இலைகள் 'சல சல' என்று அசைகின்றன.

நெருப்பு 'கண கண' என்று எரிகிறது.

சோறு 'தள தள' என்று கொதிக்கிறது.

மின்னல் 'பளிச் பளிச்' என்று மின்னுகிறது.

இடி 'டம டம' என்று இடிக்கிறது.

## பாடம் 23

### மாதங்கள்

முப்பது நாட்கள் கொண்டது ஒரு மாதம்.

### தமிழ் மாதங்கள்

1. சித்திரை
2. வைகாசி
3. ஆனி
4. ஆடி
5. ஆவணி
6. புரட்டாசி
7. ஐப்பசி
8. கார்த்திகை
9. மார்கழி
10. தை
11. மாசி
12. பங்குனி

### இங்கிலீஷ் மாதங்கள்

1. ஜனவரி
2. பெப்ருவரி
3. மார்ச்சு
4. ஏப்ரல்
5. மே
6. ஜூன்
7. ஜூலை
8. ஆகஸ்டு
9. செப்டம்பர்
10. அக்டோபர்
11. நவம்பர்
12. டிசம்பர்

பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருஷம் ஆகும். வருஷத்தின் முதல் நாள் வருஷப் பிறப்பு. இது என்ன மாதம்? வருஷத்தின் முதல் மாதம் எது? கடைசி மாதம் எது?



## பாடம் 24

# ஆறு சுவைகள்

### புளிப்பு

இது புளியம் பழம் இது புளிக்கும்
புளிப்பான பொருள்கள் புளி, மோர்.
எலுமிச்சம் பழத்தின் ருசி என்ன?
எலுமிச்சம் பழத்தின் ருசி புளிப்பு.

### தித்திப்பு

சர்க்கரை தித்திக்கும். பால் தித்திக்கும்.
தித்திப்பான பொருள்கள்; வெல்லம்,
கற்கண்டு கரும்பின் ருசி என்ன?
கரும்பின் ருசி தித்திப்பு



M. T. II-4¾

## காரம்

மிளகாய் உறைக்கும்; காரமாய் இருக்கும். காரமான பொருள்கள்: சுக்கு, மிளகு, இஞ்சி. காரம்பின் ருசி என்ன?

## கசப்பு

பாகற்காய் கசக்கும். வேப்பங்காய் கசக்கும். கசப்பான பொருள்கள்: வேப்பிலை, வெந்தயம்.

## துவர்ப்பு

வாழைப்பூ துவர்க்கும் வாழைக்காய்துவர்க்கும் துவர்ப்பான பொருள்கள்: பாக்கு கடுக்காய்.

## உப்பு (உவர்ப்பு)

கடல் நீர் உப்பாயிருக்கும் அதிலிருந்து உப்பு எடுக்கிறார்கள். உப்பு கைக்கும். உப்பின் ருசி உவர்ப்பு.

புளிப்பு, தித்திப்பு, காரம், கசப்பு, துவர்ப்பு, உப்பு என சுவைகள் ஆறு உண்டு.

## பயிற்சி

சரியானபடி சேர்த்துப்படி:—

| | |
|---|---|
| 1. நாங்கள் | எழுதுகிறேன். |
| 2. கண்களால் | எரிகிறது. |
| 3. நான் | விளையாடுகிறார்கள் |
| 4. பையன்கள் | புளிக்கும். |
| 5. குத்துவிளக்கு | பார்க்கிறோம். |
| 6. சூரியன் | வீசுகிறது. |
| 7. காற்று | நிற்கிறோம். |
| 8. மாங்காய் | மறைகிறது. |



## பயிற்சி

கோடுகள் உள்ள இடங்களில் சரியான வார்த்தைகளை அமைத்துப் படி:—

கீழே, உள்ள, பக்கத்தில் மேலே உயரே

மேசையின்———ஒரு நாற்காலி இருக்கிறது.

மேசையின்———ஒரு புத்தகம் இருக்கிறது.

மேசையின்———ஒரு நாய் இருக்கிறது.

மேசைக்கு ———ஒரு கூண்டு இருக்கிறது.

கூண்டின் ———ஒரு கிளி இருக்கிறது

## பயிற்சி

சரியா, தப்பா?

1. மூக்கினால் வாசனை அறிகிறோம்.
2. சூரியன் மாலையில் உதிக்கிறது.
3. காகம் 'மே மே' என்று கரைகிறது.
4. இள நீர் தித்திப்பாய் இருக்கும்
5. பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருஷம்,

## பயிற்சி

**கோடிட்ட இடங்களை நிரப்பு:—**

1. மூக்கினால்———அறிகிறோம்.
2. காது கேளாதவன்——
3. பூனைக் குட்டிகள்——
4. பூனை———குடிக்கும்,
5. பெண்———எழுதுகிறாள்.
6. நான் பள்ளிக்கூடத்திற்குப்———
7. பையன்கள்———உதைக்கிறார்கள்.
8. பெண்கள்——பாடுகிறார்கள்.
9. சூரியன்——உதிக்கிறது.
10. சூரியன் மறையும் திசை——

**கேள்விகளுக்குப் பதில் எழுது:—**

1. சூரியன் எப்பொழுது உதிக்கிறது?
2. நான்கு திசைகள் எவை?
3. ஒரு வாரத்திற்கு எத்தனை நாட்கள்?
4. ஒரு மாதத்திற்கு எத்தனை நாட்கள்?
5. மின்னல் எவ்விதம் மின்னுகிறது?
6. தேனின் ருசி என்ன?
7. எத்தனை வகையான சுவைகள் உண்டு?



## பாடம் 25

# ரோஜாப் பூ

இது ஒரு ரோஜாப் பூ. இது மிகவும் அழகான புஷ்பம். இது வெண்மை கலந்த சிவப்பு நிறமானது; மிகவும் வாசனை உள்ளது.

ரோஜாப் பூவில் பல அல்லிகள் இருக்கின்றன. பூவின் காம்பு குட்டையானது.

பூ விரிவதற்கு முன் அதை மொட்டு அல்லது அரும்பு என்பார்கள்.

பூக்களில் மது உண்டு. தேனீக்களும் வண்டுகளும் அந்த மதுவைக் குடிக்கவரும்.

பூக்களைத் தலையில் சூடிக்கொள்ளலாம். பூக்களால் மாலை கட்டலாம்; பூசை செய்யலாம்.

ரோஜாப் பூவிலிருந்து பனிநீர் வடிக்கிறார்கள்; அத்தரும் இறக்குகிறார்கள்.




## பாடம் 26

### மிருகங்கள்

ஆடு, மாடு, பூனை, நாய் கழுதை இவை மிருகங் கள்.

மிருகங்கள் குட்டி போட்டுப் பால் கொடுக் கும்.

உடம்பின் மேல் உரோ மம் உண்டு.

மாடு வண்டி இழுக்கும் நாய் வீட்டைக் காக்கும்.



## பாடம் 27

### பறவைகள்

காகம், மயில், குருவி, கிளி, கோழி இவை பறவைகள்.

பறவைகளுக்கு இரண்டு கால்கள் இருக்கின்றன.

இவைகளுக்கு இறகுகள் உண்டு.

இவைகள் பறக்கக் கூடும். பறவைகள் முட்டை இடும்.

முட்டையிலிருந்து குஞ்சு வெளியே வரும்.





## பாடம் 28

### பசு

பசு ஒரு மிருகம். அது சாதுவான மிருகம். நாம் அதை வளர்க்கிறோம். அது நமக்குப் பால் கொடுக்கிறது.

பசுவுக்கு இரண்டு கொம்புகள் உண்டு. யாராவது அதை அடிக்கப்போனால், அது கொம்புகளால் முட்டும்.

பசுவின் வால் நீளமானது. நுனியில் மயிர்க்குஞ்சம் இருக்கிறது. அது தன்மேல் உட்காரும் ஈ கொசு முதலியவைகளை வாலால் துரத்தும்.

பசு புல்லை மேயும். குனிந்து புல்லை மேயும்படி அதன் கழுத்து நீளமாய் இருக்கிறது.

பசு வைக்கோல், புல், தவிடு, பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை முதலியவைகளைத் தின்னும்.

தண்ணீரையும், கழுநீரையும் குடிக்கும்.



## பாடம் 29

## குருவிகள்

இந்தக் குருவிகளைப் பார். இவை சிட்டுக் குருவிகள், இவை 'சிட் சிட்' என்று சத்தம் இடும்.

சிட்டுக் குருவிகள் வீட்டுக் கூரைகளிலும், கிணற்றுப் பொந்துகளிலும் மரப் பொந்துகளிலும் கூடு கட்டும். இவை புல், வைக்கோல், பஞ்சு, நூல், இறகு முதலிய பொருள்களால் கூட்டை அமைக்கும். பெண் குருவி முட்டைகளை இடும்.

சிட்டுக் குருவிகள் ஆகாயத்தில் நன்ருகப் பறக்கும். இவற்றின் கால்கள் குட்டையானவை. இவை குதித்துக் குதித்து நடக்கும்.

சிட்டுக் குருவிகள் நெல் முதலிய தானியங்களையும் புழுக்களையும் பூச்சிகளையும் தின்னும். இவை புழுக்களைப் பொறுக்கி வந்து தம் குஞ்சுகளுக்கு வாயில் ஊட்டும்.

குருவிகளைப் பிடித்து வருத்துவது கூடாது.



பாடம்

## ஆலமரம்;

ஆலமரம் பரந்து வளரும். இதன் அடி மரம் பருத்து இருக்கும். இதற்குக் கிளைகள் உண்டு. கிளைகளிலிருந்து விழுதுகள் தொங்கும்.

ஆலமரத்தில் இலைகள் அடர்ந்து இருக்கும். ஆல் இலை பச்சை நிறம் ஆனது. தளிர் செந்நிறம் ஆனது.

ஆலம்பழங்கள் சிவப்பாகவும் உருண்டையாகவும் இருக்கும். சில பறவைகள் ஆலம் பழங்களைத் தின்னும்.

ஆலமரத்தின் நிழலில் பலர் தங்கலாம் ஆல் இலைகளைத் தைத்து உண்கலமாக உபயோகிக்கலாம். விழுதுகள் பல் துலக்க உதவும்.



## பாடம் 31

## பனை மரம்

பனை மரம் அதிக உயரமாய் வளரும். இதற்குக் கிளைகள் இல்லை: ஆனால் இதன் உச்சியில் மட்டைகள் இருக்கும்.

பனை மட்டைகளின் இரு புறங்களிலும் **கருக்குகள்** உண்டு. கருக்குகள் கூர்மையாக இருக்கும். பனை மட்டைகள் அடுப்பு எரிக்க உதவும்.

பனை ஓலை கூரை வேய உதவும். இதனால் விசிறிகளும், பாய்களும், பெட்டிகளும் செய்யலாம். பனை ஓலைகளை ஏடுகளாகச் சேர்த்து எழுதவும் உபயோகிக்கிறார்கள்.

மட்டைகளின் இடையே **பாளைகள்** இருக்கின்றன.

பனையிலிருந்து பதநீர் இறக்குகிறார்கள் பதநீரைக் கொண்டு வெல்லமும் கற்கண்டும் செய்யலாம்.

### பயிற்சி

**கோடுகள் போட்டுள்ள இடங்களை நிரப்பு :—**

1. ரோஜாப் பூக்களால்———கட்டலாம்.
2. மிருகங்களுக்கு———கால்கள் உண்டு.
3. பறவைகளுக்கு———கால்கள் உண்டு.
4. பசு——மிருகம்.
5. சிட்டுக் குருவியின் கால்கள்———.
6. ஆலமரத்தில் இலைகள்———இருக்கும்.
7. பனை மரத்தின் உச்சியில்———இருக்கும்

**கேள்விகளுக்குப் பதில் எழுது :—**

1. ரோஜாப் பூவின் நிறம் என்ன
2. மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் உள்ள வித்தியாசங்கள் எவை?
3. பசுவுக்கு அதன் வாலால் என்ன உபயோகம்?
4. சிட்டுக் குருவிகள் எவைகளைத் தின்னும்?
5. ஆலம் பழங்கள் எவ்விதம் இருக்கும்?
6. ஆலமரத்தால் நமக்கு என்ன உபயோகம்?
7. பனை ஓலைகளை எவ்விதங்களில் உபயோகிக்கிறார்கள்?

## பாடம் 32

## என்ன செய்தான்?




இவன் பெயர் ரவிராம்.
ரவிராம் என்ன செய்கிறான்?
ரவிராம் எழுதுகிறான்.
ரவிராம் என்ன செய்தான்?
ரவிராம் எழுதினான்.

**எழுது-எழுதுகிறான்-எழுதினான்.**



இந்தப் பெண்ணைப் பார்.
இவள் பெயர் வேணி.
வேணி என்ன செய்கிறாள்?
வேணி சன்னலைத் திறக்கிறாள்.



வேணி என்ன செய்கிறாள்?
வேணி சன்னலை மூடுகிறாள்.

வேணி என்ன செய்தாள்?
வேணி சன்னலைத் திறந்தாள்.
வேணி சன்னலை மூடினாள்.

**சன்னலைத் திறந்தாள்; மூடினாள்.**


1
2
3

## பாடம் 33

# தாய் சொல் கேளாத கோழிக் குஞ்சு

**படம் 1:** ஒரு பெட்டைக் கோழியும் அதன் குஞ்சுகளும் இரை தேடுகின்றன. நான்கு குஞ்சுகள் பெட்டைக்கோழி யின் பக்கத்தில் நின்று இரைதேடு கின்றன. ஒரு பெரிய குஞ்சு தூரத் தில் நின்று இரை தேடுகிறது.

**படம் 2:** பெட்டைக்கோழி பெரிய குஞ்சைக் கூப்பிடுகிறது. "தனியாக அங்குப் போகாதே. அங்கு நரி வரும்; உன்னைக் கௌவிக்கொண்டு ஓடும். இங்கு வா" என்று சொல்லுகிறது. பெரிய குஞ்சு தாயின் சொல் கேட்கவில்லை.

**படம் 3:** நரி பெரிய கோழிக் குஞ்சைக் கௌவிக்கொண்டு ஓடுகிறது. பெட் டைக்கோழியும் மற்றக் குஞ்சு களும் பயந்து ஓடுகின்றன.

### கேள்விகள்

1. பெட்டைக் கோழியும் குஞ்சுகளும் என்ன செய்கின்றன?
2. பெரிய கோழிக் குஞ்சு எங்கிருந்து இரை தேடுகிறது?
3. பெட்டைக்கோழி பெரிய குஞ்சைப் பார்த்து என்ன சொல்லுகிறது?
4. பெரிய குஞ்சு தாயின் சொல் கேட்கி றதா?
5. நரி என்ன செய்கிறது?

## கேள்விகள்

1. பெட்டைக் கோழியும் குஞ்சுகளும் என்ன செய்தன?
2, பெரிய குஞ்சு எங்கிருந்து இரை தேடினது?
3. பெட்டைக்கோழி பெரிய குஞ்சைப் பார்த்து என்ன சொன்னது?
4. பெரிய குஞ்சு தாயின் சொல் கேட்டதா?
5. நரி என்ன செய்தது?

## கதை

ஒரு நாள் ஒரு பெட்டைக் கோழியும் அதன் குஞ்சுகளும் இரை தேடிக் கொண்டு இருந்தன. பெட்டைக் கோழியின் பெரிய குஞ்சு தூரத்தில் போய் இரை தேடினது. பெட்டைக்கோழி அதை தன் பக்கத்தில் வரும்படி கூப்பிட்டது. அக்குஞ்சு தாயின் சொல்லைக் கேட்கவில்லை. அங்கு ஒரு நரி வந்தது; அக்குஞ்சைக் கௌவிக்கொண்டு ஓடியது. பெட்டைக் கோழியும் மற்றக் குஞ்சுகளும் ஓடி உயிர் தப்பின.

'தாய் சொல் கேள்'.

| | |
|---|---|
| இரை தேடுகிறது | இரை தேடினது |
| கூப்பிடுகிறது | கூப்பிட்டது |
| ஓடுகிறது | ஓடியது |

# பாடம் 34

## 'கோழி ! வா வா !'

சேவற் கோழி

1. கோழீ! கோழீ! வா வா
   கொக்கோ கோ என்று வா
   கோழீ! ஓடி வா வா
   கொண்டைப் பூவைக் காட்டு வா.

2. காலை கூவி எங்களைக்
   கட்டில் விட்டெழுப்புவாய்
   வேலை செய்ய ஏவுவாய்
   வெற்றி கொண்ட கோழியே !

பெட்டைக் கோழி

3. கோழீ! கோழீ! வாவா
   கூரை விட்டிறங்கி வா
   கோழீ! முட்டை இட வா
   கூட்டில் அடை காக்கவா.

4. பெட்டைக் கோழீ! வா வா
   பிள்ளைகளைக் கூட்டி வா
   குட்டை நெல்லைக் கொட்டினேன்
   கொத்திக் கொத்தித் தின்னவா.

5. வஞ்சமாய்ப் பருந்ததோ
   வானில் வட்டம் போடுது!
   குஞ்சணைத்துக் காப்பாயோ?
   கூட்டில் கொண்டு சேர்ப்பாயோ?

—சி. தேசிகவிநாயகம் பிள்ளை

---

குட்டை = சிறுகூடை

## பாடம் 35

## மணியும் அவன் மாமனும்

**மாமன் :** மணி, நீ எங்கே போகிறாய்?

**மணி :** மாமா, நான் பள்ளிக்கூடத்திற்குப் போகிறேன்.

**மாமன் :** நீ நேற்றுப் பள்ளிக்கூடத்திற்குப் போனாயா?

**மணி :** ஆம், போனேன்.

**மாமன் :** பள்ளிக்கூடத்தில் உனக்கு என்ன பாடங்களைக் கற்பிக்கிறார்கள்?

**மணி :** தமிழ், கணக்கு, கதை பாட்டு, பூகோளம் முதலிய பாடங்களைக் கற்பிக்கிறார்கள்.

**மாமன் :** நீ பள்ளிக்கூடத்தில் விளையாடுவது உண்டா?

**மணி :** ஆம், விளையாடுவது உண்டு. சாயங்காலம் ஐந்து மணிக்குப் பாடங்கள் முடியும். பிறகு நானும் மற்றப் பையன்களும் விளையாடுவோம்.

| | |
|---|---|
| **போ** | **போனேன்** |
| **போகிறேன்** | **போவேன்** |



பாடம் 36

## தாயும் குழந்தையும்

தாய் தன் குழந்தையை இடுப்பில்வைத்திருக்கிறாள். அவள் குழந்தைக்குப் பால் ஊட்டுவாள். குழந்தையை முத்தம் இடுவாள். குழந்தையோடு கொஞ்சி விளையாடுவாள். குழந்தையைத் தொட்டிலில் படுக்க வைப்பாள்; தாலாட்டுவாள்; பாடுவாள்; குழந்தையை உறங்கச் செய்வாள்.

தாய் குழந்தையைக் குளிப்பாட்டுவாள். குழந்தைக்குச் சுத்தமான உடைகளை உடுத்துவாள். கண்ணுக்கு மை இடுவாள். நெற்றியில் பொட்டு வைப்பாள்.

தாய் குழந்தையை அன்பாக வளர்க்கிறாள்.



B
031 (2)
N49



## பாடம் 37

## கை வீசம்மா கை வீசு

1. கை வீசம்மா கை வீசு
   கடைக்குப் போகலாம் கை வீசு
2. பழங்கள் வாங்கலாம் கை வீசு
   பாங்காய்த் தின்னலாம் கை வீசு
3. மிட்டாய் வாங்கலாம் கை வீசு
   புட்டுத் தின்னலாம் கை வீசு
4. பொம்மை வாங்கலாம் கை வீசு
   சொகுசாய் ஆடலாம் கை வீசு
5. சட்டை வாங்கலாம் கை வீசு
   போட்டுக் கொள்ளலாம் கை வீசு
6. பூக்கள் வாங்கலாம் கை வீசு
   சூடிக் கொள்ளலாம் கை வீசு.

## பாடம் 38

# மோட்டார் வண்டிகள்

1. இக்காலத்தில் மோட்டார் வண்டிகள் சாதாரணமாக எங்கும் காணப்படுகின்றன. மோட்டார் வண்டிகளைப் **பிளஷர்கார், மோட்டார் பஸ், மோட்டார் லாரி** என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.



2. இது ஒருபிளஷர்கார். இது 'பெட்ரோல்' என்ற எண்ணெயின் உதவியால் ஓடுகிறது.

3. மோட்டார் வண்டியும் ரயில்வண்டியைப்போல வேகமாக ஓடும். ரயில் வண்டி தண்டவாளங்களின் மீது தான் ஓடக்கூடும். ஆனல் மோட்டார் வண்டி சாதாரணமாக எங்கும் தரையின் மீது ஓடக்கூடியது.

4. மோட்டார் வண்டி மிகவும் விலை உயர்ந்தது. ஆகையால் பணக்காரர்கள் மட்டுமே மோட்டார் வண்டியை வாங்கி உபயோகிப்பார்கள்.

5. இக்காலத்தில் பிரயாணம் செய்வதற்குப் பஸ்கள் மிகவும் உபயோகப்படு

கின்றன. ஒரு பஸ்ஸில் இருபது, முப்பது மனிதர்கள் வரை இருக்கலாம். பஸ்ஸில் **'கண்டக்டர்'** என்று ஒருவர் இருப்பார். அவர் பிரயாணிகளிடம் பயணக் கூலியை வசூலிப்பார். **'டிரைவர்'** பஸ்ஸை ஓட்டிச் செல்லுவார்.



6. இது ஒரு **மோட்டார் லாரி** ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சாமான்களை எடுத்துச் செல்ல மோட்டார் லாரி உதவுகிறது.



கேள்விகள்

1. மோட்டார் வண்டி ஓட என்ன எண்ணெய் வேண்டும்?
2. மோட்டார் வண்டியின் உபயோகம் என்ன?
3. பஸ்ஸில் சுமார் எத்தனை பேர் பிரயாணம் செய்யலாம்?
4. கண்டக்டரின் வேலை என்ன?
5. மோட்டார் லாரி எவ்விதம் உபயோகப் படுகிறது?

பயிற்சி

**கோடிட்ட** இடங்களில் சரியான வார்த்தை அமை:—

பஸ்ஸை, மெதுவாக, பயணக்கூலியை, வேகமாக.

1. மோட்டார் வண்டி———ஓடும்.
2. மாட்டு வண்டி———ஓடும்.
3. கண்டக்டர்———வசூலிப்பார்.
4. டிரைவர்———ஓட்டிச் செல்லுவார்.



## பாடம் 39

### நல்ல பையன்

1. இந்தப் பையனுடைய பெயர் பொன்னுசாமி. இவனுடைய தகப்பனாரின் பெயர் முருகேச பிள்ளை. அவர் ஒரு மிராசுதார். பொன்னுசாமியின் தாயார் பெயர் தங்கம்மாள். பொன்னுசாமிக்கு ஓர் அண்ணன் இருக்கிறான். ஓர் அக்காள் இருக்கிறாள். தம்பி இல்லை. தங்கை இல்லை.

2. பொன்னுசாமிக்கு ஏழு வயது ஆகிறது. அவன் வசிக்கும் ஊர் வேலன் பட்டி. அந்த ஊரில் ஒரு சர்க்கார் பள்ளிக் கூடம் இருக்கிறது. பொன்னுசாமி அந்தப் பள்ளிக்கூடத்தில் இரண்டாவது வகுப்பில் படிக்கிறான்.

3. பொன்னுசாமி தினந்தோறும் அதி காலையில் எழுந்திருப்பான். பல்லை விளக்கி ஸ்நானம் செய்வான். சுத்தமான உடைகளை

உடுத்திக் கொள்வான். பிறகு தன் பாடங்களைக் கவனமாகப் படிப்பான்.

4. பொன்னுசாமி காலம் தவருமல் பள்ளிக்கூடத்திற்குப் போவான். உபாத்தியாயர் கற்பிக்கும் பாடங்களை நன்ருகக் கவனிப்பான்.

5. பொன்னுசாமி பொய் சொல்லமாட்டான். கெட்ட பிள்ளைகளுடன் சேரமாட்டான். அவன் பிள்ளைகளுடன் சண்டை இடுவதில்லை, கெட்ட வார்த்தைகளைச் சொல்லுவதும் இல்லை. ஊரார் எல்லோரும் பொன்னுசாமியை 'நல்ல பையன்' என்று சொல்லுவார்கள்.

### கேள்விகள்

1. பொன்னுசாமிக்கு எத்தனை வயது ?
2. பொன்னுசாமி எவ்விதமான பையன் ?

### பயிற்சி

கேள்விகளுக்குப் பதில் சொல்லு - பதில் எழுது :—

1. உன் பெயர் என்ன ?
2. உன் தகப்பனரின் பெயர் என்ன ?
3. உனக்கு அண்ணன் இருக்கிருன ? எத்தனை பேர் ?
4. உனக்கு எத்தனை அக்காள், எத்தனை தங்கை, எத்தனை தம்பி இருக்கிருர்கள் ?
5. உன் வயது என்ன ?
6. உன் ஊர் எது ?
7. உன் தகப்பனரின் வேலை என்ன ?

## பாடம் 40

### சுகவழி

1. சூரியன் உதிக்கும் முன் எழுந்திரு.
2. பால்போல் வெளுக்கப் பல்லைத் துலக்கு.
3. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.
4. குளிர்ந்த நீரில் குளிக்கப் பழகு.
5. கழுவா உடம்பில் ஒழியாச் சிரங்கு.
6. கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு.
7. கூழ் ஆனாலும் குளித்துக் குடி.
8. பசித்துப் புசிப்பதே பரம சுகம்.
9. மிதமான உணவே இதம் உடற்குத் தரும்.
10. நன்றாய் உணவை மென்றே உட்கொள்.
11. ஈ மொய்த்த உணவு எவர்க்கும் ஆகாது.
12. ஓடி ஆடுதல் உடலுக்கு உறுதி.
13. சுத்த ஆகாயம் சுகம் தரும்.
14. குளிரோடு காய்ச்சல் கொசுவால் வரும்.
15. கண்ட இடத்தில் காறி உமிழாதே.
16. நகத்தைப் பல்லால் கடிக்காதே,



கிராமம்

## பாடம் 41

## கிராமம்

1. வேலன்பட்டி ஓர் அழகான கிராமம். கிராமத்திற்கு அருகே வயல்களும், தோட்டங்களும், தோப்புகளும் இருக்கின்றன. ஆடுமாடுகள் மேய்வதற்கு வசதியான பசும் புல் தரைகளும் உண்டு.

2. இந்தக் கிராமத்தில் இரண்டு குளங்களும், ஒரு வாய்க்காலும் உண்டு. ஊரிலிருந்து ஒரு மைல் தூரத்திற்குள் நதி ஒன்று ஓடுகிறது. ஆகையால்; இவ்விடத்தில் தண்ணீர் வசதிக்குக் குறைவு இல்லை.

3. இவ்வூரில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. இப்பள்ளிக்கூடத்தில் அநேக சிறுவர்களும் சிறுமிகளும் படித்து வருகிறார்கள்.

4. வேலன் பட்டியில் உள்ளவர்களில் பலர் குடியானவர்கள். அவர்கள் உழுது பயிரிட்டு ஜீவனம் செய்கிறார்கள்.

5. இவ்வூரில் துணிநெய்பவர் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் தறிகளில் துணிகளை நெய்கிறார்கள். இவ்விதமே இங்கு வேறு தொழில்கள் செய்வோரும் உண்டு.

6. சிலர் மரத்தினால் பல சாமான்களைச் செய்கிறார்கள். அவர்கள் உழவுக்கு வேண்டிய சாமான்களையும், வீடுகளுக்கு வேண்டிய கதவு முதலிய சாமான்களையும் செய்து கொடுப்பார்கள். சிலர் இரும்பால் அரிவாள்,

மண்வெட்டி, கோடரி முதலிய ஆயுதங்கள் செய்கிறார்கள். சிலர் மண்ணால் பாண்டம் வனைகிறார்கள், தையற்காரர் உடைகளைத் தைத்துக் கொடுக்கிறார்கள். இவ்விதத் தொழிலாளிகள் கிராமத்திற்கு மிக அவசியம். சிறுவர்களே, நீங்களும் ஏதாவது ஒரு தொழில் கற்றுக் கொள்ள வேண்டும்.



### கேள்விகள்

1. வேலன்பட்டிக் கிராமம் அழகாகக் காணப்படுவது ஏன்?
2. அங்குத் தண்ணீர் வசதிக்கு ஏன் குறைவு இல்லை?
3. அந்தக் கிராமத்திலுள்ள தொழிலாளிகள் யார்?

### பயிற்சி

அருகே, வசதியான, அழகான, அநேக, ஒற்றுமையாக-ஒவ்வொரு வார்த்தையையும் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

**உதாரணம் :**

கோயிலின் அருகே ஒரு குளம் இருக்கிறது.

# பாடம் 42

## தபாற்காரன்

1. இந்தப் படத்தைப் பார். ஒரு தபாற்காரன் ஒருவருக்குக் கடிதம் கொடுத்துக் கொண்டிருக்கிறான். அவனது தோளில் ஒரு பை தொங்கிக்கொண்டிருக்கிறது. அவன் தன் இடது கையில் சில கடிதங்கள் வைத்திருக்கிறான். அவனுடைய பையிலும் கடிதங்கள் இருக்கின்றன. அவன் தபால் ஆபீசிலிருந்து கடிதங்களைக் கொண்டு வருகிறான்.



2. ஒவ்வொரு கடிதத்திலும் மேல் விலாசம் எழுதி இருக்கும். இந்தப் படத்தில் காட்டியிருப்பது ஒரு கடிதத்தின் மேல் விலாசம்.

**ஸ்ரீ எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை,**
**புத்தக வியாபாரம்.**
**திருநெல்வேலி ஜங்ஷன்.**

தபாற்காரன் விலாசங்களைப் பார்த்து, அவற்றில் குறிப்பிட்டவர்களுக்குக் கடிதங்களைக் கொடுத்துக்கொண்டு போவான்.

3. நாம் கடிதங்களை எழுதுவதற்குக் கார்டுகளையும் கவர்களையும் உபயோகிக்கிறோம். இவை தபால் ஆபீசில் விலைக்குக் கிடைக்கும்.

4. நாம் அயல் ஊர்களில் இருப்பவர்களுக்குக் கடிதம் எழுதுகிறோம். இக்கடிதங்களைத் தபாற் பெட்டியில் போடுகிறோம். தபாற்காரன் அல்லது தபாற் சேவகன் தபாற்பெட்டிகளிலிருந்து கடிதங்களை எடுப்பான். அவைகளைத் தபால் ஆபீசுக்குக் கொண்டு போவான். அங்குள்ள உத்தியோகஸ்தர்கள் கடிதங்களை விலாசங்களில் கண்ட ஊர்களுக்கு அனுப்புவார்கள்.

### கேள்விகள்

1. தபாற்காரனது வேலை என்ன?
2. கார்டின் விலை என்ன? கவரின் விலை என்ன?
3. உன் தகப்பனாரின் விலாசம் என்ன?
4. நாம் கடிதங்களை எழுதி எங்கே போடுகிறோம்?

### பயிற்சி

மௌனமாகப் படி. பிறகு அந்தச் சமாச்சாரத்தைக் கோவிந்தன் தன் தாயாரிடம் சொல்லுவது போல் நீ சொல்லு.

கோவிந்தனிடம் அவனுடைய தகப்பனார் அரையணா கொடுத்தார். தபாலாபீசுக்குப் போய் ஒரு கார்டு வாங்கிக்கொண்டு வரச்சொன்னார். அவன் தபாலாபீசுக்குப் போகிற வழியில் அவனுடைய சிநேகிதனைச் சந்தித்தான்; இருவரும் தபாலாபீசுக்குப்போனார்கள். கார்டு வாங்கிக்கொண்டு திரும்பினார்கள். கோவிந்தன் கார்டைத் தன் தகப்பனாரிடம் கொடுத்தான்.

## பாடம் 43

## சோம்பேறி முத்தன்

1. முத்தன் ஒரு சோம்பேறி. அவன் வேலை செய்வதே இல்லை. அவன் பிச்சை எடுத்து வயிறு வளர்த்து வந்தான். ஒரு நாள் முத்தனுக்கு எங்கும் பிச்சை கிடைக்க வில்லை. அவன் ஊரெல்லாம் அலைந்து திரிந்தான். பிறகு வழியிலே நின்று கொண்டு கையை விரித்து நீட்டினான். வழிப்போக்கர்களை நோக்கி, 'ஐயா! தயவு செய்து ஒரு காலணா எனக்குக் கொடுங்கள்' என்று கேட்டான். அவர்களில் ஒருவரும் அவனுக்கு உதவி செய்யவில்லை. 'இவன் தடியன்; சோம்பேறி' என்று அவர்கள் சொன்னார்கள்.



2. பிறகு முத்தன் ஒரு தோட்டத்திற்குப் போனான். அங்கே அவன் ஒரு காக்கையைக் கண்டான். அது சிறு சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டு இருந்தது. 'காக்கை சோம்பேறியாக இருக்கவில்லை; கூடு கட்டப்போகிறது' என்று அவன் தெரிந்து கொண்டான்.





3. முத்தன் தோட்டத்தைச் சுற்றி வந்தான். அங்கே ஒரு பக்கத்தில் சில தேனீக்களைக் கண்டான். அவை மலர் தோறும் பறந்து கொண்டு இருந்தன. 'தேனீக்கள் சுறு சுறுப்பாக மதுவை எடுக்கின்றன' என்று அவன் அறிந்து கொண்டான்.

4. முத்தனுக்குப் புத்தி வந்தது. 'இனி நான் சோம்பேறியாக இருக்கமாட்டேன்; சுறுசுறுப்பாக இருப்பேன். பிச்சை எடுக்க மாட்டேன்; உழைத்துப் பொருள் சம்பாதிப்பேன்' என்று அவன் தீர்மானித்தான். பிறகு அவன் ஒரு கடையில் வேலைக்கு அமர்ந்தான்.

### கேள்விகள்

1. முத்தன் எவ்விதம் வயிறு வளர்த்து வந்தான்?
2. அவன் பிச்சை கேட்டபோது வழிப்போக்கர்கள் என்ன சொன்னார்கள்?
3. தோட்டத்தில் காக்கை என்ன செய்துகொண்டிருந்தது?
4. தேனீக்கள் என்ன செய்துகொண்டிருந்தன?
5. காக்கையையும் தேனீக்களையும் பார்த்த முத்தன் என்ன தீர்மானித்தான்?

## பாடம் 44

# கிளிப்பாட்டு

1. பச்சைக் கிளியே வாவா!
பாலுஞ்சோறும் உண்ணவா!
கொச்சிமஞ்சள் பூசவா!
கொஞ்சிவிளை யாடவா!

2. பையப்பையப் பறந்துவா!
பாடிப்பாடிக் களித்துவா!
கையில்வந் திருக்கவா!
கனியருந்த ஓடிவா!

3. வட்டமாயுன் கழுத்திலே
வானவில்லை ஆரமாய்
இட்டமன்னர் யாரம்மா
யானறியக் கூறம்மா!

4. கவலையெல்லாம் நீங்கவே
களிப்பெழுந்து பொங்கவே
பவளவாய் திறந்து நீ
பாடுவாயோ தத்தம்மா!

—சி. தேசிகவிநாயகம் பிள்ளை


1
2
3
4

## பாடம் 45

# பேராசை கொண்ட நாய்

படம் 1: ஒரு நாய் ரஸ்தாவின் வழியாகப் போகிறது. அதன் வாயில் ஒரு ரொட்டி இருக்கிறது.

படம் 2: வழியில் ஒரு நீரோடை குறுக்கிட்டுச் செல்லுகிறது. அதைத் தாண்டிச் செல்ல அதன் மீது ஒரு சிறிய பாலம் இருக்கிறது. நாய் அந்தப் பாலத்தின் மீது போகிறது. அது தன் நிழலைத் தண்ணீரில் பார்க்கிறது.

படம் 3: தண்ணீரில் வேறொரு நாய் மற்றொரு ரொட்டியைக் கௌவிக்கொண்டு இருப்பதாக அது நினைக்கிறது. அந்த ரொட்டியைப் பிடுங்கிக் கொள்ள அது ஆசைப்படுகிறது. 'ளொள் ளொள்' என்று குரைக்கிறது. உடனே ரொட்டி தண்ணீரில் விழுகிறது. ரொட்டியை எடுக்க நாய் தண்ணீரில் குதிக்கிறது.

படம் 4: ரொட்டி தண்ணீரோடு போய் விடுகிறது. ஆகையால், நாய் வருத்தத்துடன் கரை ஏறுகிறது.

### கேள்விகள்

1. நாய் எதைக் கௌவிக்கொண்டு போனது?
2. நீரோடை எங்கே இருந்தது?
3. அதைத் தாண்டிச் செல்ல அதன் மீது என்ன இருந்தது?

4. நாய் பாலத்தின்மீது போகும்போது எதைப் பார்த்தது?

5. நாய் தன் நிழலைப் பார்த்ததும் என்ன நினைத்தது?

6. பிறகு நாய் என்ன செய்தது?

7. நாய் குரைத்ததும் என்ன நேர்ந்தது?

8. ரொட்டி தண்ணீரில் விழுந்ததும் நாய் என்ன செய்தது?

9. நாய் ஏன் வருத்தப்பட்டது?

10. இந்தக் கதையிலிருந்து நீ அறிவது என்ன?

### பயிற்சி

கோடிட்ட இடங்களைச் சரியான வார்த்தைகளால் நிரப்பு:—

1. நான் நேற்றுப் பள்ளிக்கூடத்திற்குப் ——(போவேன், போனேன், போகிறேன்.)
2. நேற்று கோபாலன் கீழே —————— (விழுகிறான், விழுவான், விழுந்தான்)
3. நாளை என் தகப்பனார்—— ——(வருவார் வந்தார், வருகிறார்.)

### கற்றுக்கொள்

| | | | |
|---|---|---|---|
| இருக்கிறது | இருந்தது | ஆசைப்படுகிறது | ஆசைப்பட்டது |
| செல்லுகிறது | சென்றது | குரைக்கிறது | குரைத்தது |
| பார்க்கிறது | பார்த்தது | குதிக்கிறது | குதித்தது |
| நினைக்கிறது | நினைத்தது | ஏறுகிறது | ஏறினது |



## பாடம் 46

## எறும்புகள்

**ராமன்:** அண்ணா! இந்த எறும்புகளைப் பார். இவை என்ன செய்கின்றன?

**முருகன்:** தம்பி! இவை இரையை இழுத்துக் கொண்டு போகின்றன. எறும்புகளுக்கு வாசனை பிடிக்கும் சக்தி அதிகம் உண்டு. அவை மோப்பத்தினால் பண்டங்கள் உள்ள இடங்களை அறியும். தம் இனத்துடன் சாரை சாரையாகப் போகும். இரையை எடுத்துக் கொண்டுவரும்.

**ராமன்:** அண்ணா! இவை இரையை எடுத்துக்கொண்டு எங்கே போகின்றன?

**முருகன்:** இவை தம் புற்றுக்குப் போகின்றன.

**ராமன்:** புற்று என்றால் என்ன?

**முருகன்:** எறும்பு வாசம் செய்யும் இடத்தைப் புற்று என்று சொல்லுகிறோம். எறும்புப் புற்றுக்களைச் சாதாரணமாக மரம் செடிகள் உள்ள இடங்களில் பார்க்கலாம்.

**ராமன்:** அண்ணா! எறும்பின் புற்று எவ்விதம் இருக்கும்?

**முருகன்:** நாம் வசிக்கும் ஊரில் பல தெருக்களும் வீடுகளும் இருக்கின்றன அல்லவா? அதுபோல் எறும்புப்புற்றினுள் அநேகம் பாதைகளும் சின்னஞ் சிறு வீடுகளும் இருக்கின்றன. எறும்புப் புற்று எறும்புகளுக்கு ஒரு பட்டணம் போலவே இருக்கும்.

**ராமன்:** அண்ணா! எல்லா எறும்புகளும் ஒரேமாதிரியாக இல்லையே! அது என்ன அப்படி?

**முருகன்:** தம்பி எறும்புகளில் பல வகைகள் உண்டு. சிற்றெறும்பு, கட்டெறும்பு, சுள்ளெறும்பு என்பனவற்றை நாம் சாதாரணமாகப் பார்க்கிறோம்.

**ராமன்:** இதோ ஊர்ந்து செல்லும் எறும்புகளுக்கு என்ன பெயர்?

**முருகன்:** இவை கட்டெறும்புகள்.

**ராமன்:** அண்ணா! அதோ பார். சில கட்டெறும்புகளுக்கு இறக்கைகள் இருக்கின்றன. ஏன் எல்லா எறும்புகளுக்கும் இறக்கைகள் இல்லை?

**முருகன்:** தம்பி! கட்டெறும்புகளில் சில கட்டெறும்புகளுக்குத்தான் இறக்கைகள் உண்டு. இறக்கை உள்ளவைகளில் சிறுத்து இருப்பவை ஆண் எறும்புகள்; பெருத்து இருப்பவை பெண் எறும்புகள் ஆகும். தவிர, எறும்புகளை

ராஜா எறும்பு, ராணி எறும்பு வேலைக்கார எறும்பு என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். எறும்புகள் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கும். அதுபோல நாமும் எப்பொழுதும் சுறு சுறுப்பாக இருக்க வேண்டும்.

### கேள்விகள்

1. எறும்புப் புற்று என்றால் என்ன?
2. எறும்புப் புற்றுக்கள் சாதாரணமாக எங்கு இருக்கும்?
3. எறும்புப் புற்று எவ்விதம் இருக்கும்?
4. எறும்பின் சில வகைகளைச் சொல்லு?
5. எறும்பின் குணங்கள் என்ன?

### பயிற்சி

'சிறுத்து' இதற்கு எதிரான அர்த்தமுள்ள வார்த்தை 'பெருத்து' அதாவது 'சிறுத்து' என்பதன் எதிர்ப்பதம் 'பெருத்து' இதுபோல் 'போ' என்பதன் எதிர்ப்பதம் 'வா' எதிர்ப்பதங்களைக் கீழ்க்கண்டபடி எழுதலாம்:—

சிறுத்து × பெருத்து; போ × வா

### கற்றுக்கொள்

வேகமாக × மெதுவாக, அதிகம் × குறைவு,
பல × சில, உண்டு × இல்லை.



## பாடம் 47

# தெய்வம் இகழேல்

1. ஒரு மனிதன் ஒரு சாலை வழியாக நடந்து போய்க்கொண்டு இருந்தான். மத்தியானம் ஆயிற்று. வெயில் அதிகமாக இருந்தது. அவன் இளைப்பாற எண்ணினான்.

2. அவன் வழியிலிருந்த ஓர் ஆலமரத்தினடியில் உட்கார்ந்தான். மரத்தின் கிளையிலிருந்த ஒரு பறவை 'கீச் கீச்' என்று கத்தியது. உடனே வழிப்போக்கன் அண்ணாந்து பார்த்தான். பறவை ஓர் ஆலம் பழத்தைத் தின்றுகொண்டிருப்பதைக் கண்டான். உடனே அவன் "ஆ! கடவுள் எல்லாவற்றையும் படைத்தவர். அவர் எல்லாம் அறிந்தவர் என்று சொல்லுகிறார்களே. இவ்வளவு பெரிய மரத்திற்கு இவ்வளவு சிறிய பழங்கள் தானா? இவை ஒன்றுக்கொன்று பொருத்தமாக இல்லையே கடவுளை எல்லாம் அறிந்தவர் என்று சொல்லுவது பொருந்தாது" என்று சொல்லிக் கடவுளை இகழ்ந்தான்.

3 பிறகு அவன் மரத்தடியில் படுத்து தூங்கினான். அப்பொழுது ஓர் ஆலம்பழம் மரத்திலிருந்து அவன் கண் இமை மேல் விழுநதது.

4. உடனே அவன் திடுக்கிட்டு எழுந்தான். அந்தப் பழத்தைப் பார்த்தான். "ஆ! இந்தப் பழம் மிகப் பெரியதாக இருந்திருந்தால் இப்பொழுது என் கதி என்னகும்? கடவுளை நான் இகழ்ந்தது தவறு. கடவுள் எல்லாம் அறிந்தவர்தான். அவரை நாம் இகழக்கூடாது" என்று நினைத்தான்; கடவுளை வணங்கினான்.

## கேள்விகள்

1. வழிப்போக்கன் இளைப்பாற எங்கே உட்கார்ந்தான்?

2. ஆலம் பழங்களைப் பார்த்ததும் அவன் என்ன நினைத்தான்?

3. அவன் தூங்கும்போது என்ன நேர்ந்தது?

4. அவன் கடவுளை இகழ்ந்தது தவறு என்பதை எவ்விதம் அறிந்தான்?

5. இந்தக் கதையிலிருந்து நீ அறிவது என்ன?

## பயிற்சி

'உண்டு' அல்லது 'இல்லை' என்னும் வார்த்தையால் பதிலைக் குறிப்பிடு :—

1. குதிரைக்குக் கொம்புகள் உண்டா?
2. ஆலமரத்திற்குக் கிளைகள் உண்டா?
3. உன் ஊரில் தபாலாபீசு உண்டா?
4. நீ மதுரைக்குப் போனதுண்டா?
5. நீ கடவுளை வணங்குவது உண்டா?

## உலக நீதி

1. ஓதாமல் ஒரு நாளும்
இருக்க வேண்டாம்.

2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்.

3. மாதாவை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

4. வஞ்சனைகள் செய்வாரோடு
இணங்க வேண்டாம்.

5. போகாத இடந்தனிலே
போக வேண்டாம்.

6. அஞ்சாமல் தனிவழியே
போக வேண்டாம்.

7. அடுத்தவரை ஒருநாளும்
கெடுக்க வேண்டாம்.

8. நெஞ்சாரப் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.

9. நஞ்சுடனே ஒருநாளும்
பழக வேண்டாம்.

10. தனந்தேடி உண்ணுமல்
புதைக்க வேண்டாம்.

11. தருமத்தை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

12. குற்றமொன்றும் பாராட்டித்
திரிய வேண்டாம்.

13. கொலேகளவு செய்வாரோடு
இணங்க வேண்டாம்.

14. கற்றவரை ஒருநாளும்
பழிக்க வேண்டாம்.

15. கருதாமல் கருமங்கள்
முடிக்க வேண்டாம்.

16. வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத்
திரியவேண்டாம்.

17. மதியாதார் தலேவாசல்
மிதிக்க வேண்டாம்.

18. மூத்தோர்சொல் வார்த்தைதனே
மறக்க வேண்டாம்.

19. முன்கோபக் காரரோடு
இணங்க வேண்டாம்.

20. தெய்வத்தை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.



600 008.
146130
TB 031(2) N49

RTL/900

# MANAVAR TAMIL READER

BOOK II

By

V. CHIDAMBARA RAMALINGA PILLAI

S. R. SUBRAMANIA PILLAI

PUBLISHER :: TINNEVELLY JN.

As. 4